**கவனிக்க**.- 2016.08.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1983 - 2016 සැප්තැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2016.09.02

*1983 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1528* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1534* |


**கவனிக்க**.- லக் ஜனசெத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிகம | புதிய வீதி பிரதேசத்தின் வெலிகம கோறளைப் பிரிவில் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

9-109

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - யாழ்ப்பாண மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஐப்பசி மாதம் 03 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஆவணி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சண்டிலிப்பாய் | மானிப்பாய் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |

9-117

**உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆரம்ப (தொழில்நுட்ப) சேவை வகையைச் சார்ந்த சாரதி தரம் III இற்கான பதவி வெற்றிடங்கள் - 3**

1.1 ***கல்வித் தகைமைகள்.***- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது சிங்களம்/ தமிழ் மொழிகள் உட்பட இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 ***தொழில்சார் தகைமைகள் :***

(i) தனியார்/ வாடகை வாகனம் மற்றும் தார் நிறை 24 அந்தரிற்கும் குறைவான ஸ்டேஷன் வெகன் (பார வண்டி) வாகனங்களை ஓட்டுவது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு செய்யப்படும் தினத்திற்கு மூன்று (3) வருடங்களுக்கு முன்னர் ஆகக் குறைந்தது சீ மற்றும் சீ-1 வாகன வகுப்பிற்கான அனுமதிப்பத்திரத்தையோ அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தின்படி பீ வகுப்பிற்கான அனுமதிப்பத்திரத்தையோ பெற்றிருத்தல் வேண்டும்.)

(ii) நெடுஞ்சாலைகள் சட்டக்கோவை குறித்த சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.3 ***அனுபவம்.***- வாகன சாரதியாக மூன்று (3) வருட அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

1.4 ***உடற் தகைமைகள்.***- உயரம் ஆகக்குறைந்தது 5 அடியாக இருத்தல் வேண்டும். பகல் வேயிலும் இரவு வேளையிலும் சேவையில் ஈடுபடுவதற்கேற்றவாறு உடல் ரீதியில் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். அரசாங்க மருத்துவர் ஒருவரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் மூலம் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.5 ***சம்பள அளவுத்திட்டம்.***- PL 3-2016 - ரூபா 25,790 - 10 x 270 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூபா 38,990. 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் பிரகாரம் மூன்றாம் தரத்திற்குரிய ஆரம்ப சம்பள படிமுறையில் வைக்கப்படுவர்.

1.6 ***ஆட்சேர்ப்பு முறை :***

(i) தொழில்வாண்மைப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும். உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் தொழில்வாண்மைப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் தேர்வில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்ப தாரிகளுள் வெளிப்படுத்தும் ஆற்றலின் அடிப் படையில் விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப் படுவர்.

மேற்குறித்த அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் பொது நேர்முகப் பரீட்சைக் குழுவினால் ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

(பொது நேர்முகப் பரீட்சைக் குழுவினால் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

*தொழில்வாண்மைப் பரீட்சை :*

| பாடங்கள் | உச்சப் புள்ளி | சித்தி பெறுவ தற்கான புள்ளி |
|---|---|---|
| வாகனம் ஓட்டும் திறன் | 40 | 20 |
| நெடுஞ்சாலை ஒழுங்குவிதிகள் குறித்த செயன் முறை அறிவு | 40 | 20 |
| மோட்டார் இயந்திர வியல் குறித்த அடிப்படை அறிவு | 20 | 10 |

2. **ஆரம்ப (பகுதியளவிலான தொழில்நுட்ப) சேவை வகையைச் சார்ந்த தோட்டப் பணியாளர் (தரம் III) - பதவி வெற்றிடம் 1**

**தச்சர் (தரம் III) - பதவி வெற்றிடம் 1**

2.1 ***கல்வித் தகைமைகள்.***- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது சிங்களம்/ தமிழ் மொழிகள் உட்பட இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2 ***தொழில்சார் தகைமைகள்.***- துறைக்கு ஏற்ப மூன்றாம் நிலை தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையின் (N. V. Q.) ஆகக் குறைந்தது இரண்டாம் (2) மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

2.3 ***அனுபவம்.***- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் இரண்டு (2) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (அவ்வனுபவத்தை சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

2.4 ***சம்பள அளவுத்திட்டம்.***- PL *2-2016 ரூபா 25,250 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூபா 38,450.*

*2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் பிரகாரம் மூன்றாம் தரத்திற்குரிய ஆரம்ப சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவர்.*

2.5 ***ஆட்சேர்ப்பு முறை.***- தொழில்வாண்மைப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேப்முகப் பரீட்சையில் உச்ச புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக் குழுத் தீர்மானத்தின்படி ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

தொழில்வாண்மைப் பரீட்சை :

| *பாடம்* | *உச்சப் புள்ளி* | *சித்தி பெறுவ தற்கான புள்ளி* |
|---|---|---|
| பதவிக்குரிய தொழில்வாண்மைப் பரீட்சை | *100%* | *40%* |

*கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.*- கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சையின் போதே தகைமைகள் பரிசீலிக்கப்படும் :

| *பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* |
|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2. மேலதிக அனுபவம் |
| 3. துறைக்கேற்ப அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றில் கற்றுள்ள பாடநெறிகள் மற்றும் பெற்றுள்ள பயிற்சிகள் |
| 4. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படும் மனப்பான்மை மற்றும் ஆளுமைக்கு |

**3. ஆரம்ப (தொழில்நுட்பம் சாராத) சேவை வகை - நூதன சாலை ஊழியர்கள் (தரம் III) - பதவி வெற்றிடங்கள் 44.**

3.1 ***கல்வித் தகைமைகள்.***- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது சிங்களம்/ தமிழ் மொழிகள் உட்பட இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.2 ***சம்பள அளவுத்திட்டம்.***- PL *1 - 2016 - ரூபா 24,250 - 10 x 250 - 10 x 270 - 10 x 300 - 12 x 330 - ரூபா 36,410.*

*2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 03/ 2016 இன் பிரகாரம் மூன்றாம் தரத்திற்குரிய ஆரம்ப சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவர்.*

3.3 ***ஆட்சேர்ப்பு முறை.***- தேசிய நூதனசாலைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினரால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக் குழுவினரின் தீர்மானத்திற்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

| *பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* |
|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2. அனுபவம் |
| 3. துறைக்கேற்ப அரசாங்கத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்றுள்ள பாடநெறிகள் மற்றும் பெற்றுள்ள பயிற்சிகள் |
| 4. விளையாட்டு மற்றும் வேறு மேலதிக செயற் பாடுகள் |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படும் மனப் பான்மை மற்றும் ஆளுமை தகைமைகளாகக் கொள்ளப்படும். |

* *சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.*- இப்பதவிகள் நிரந்தரமானது. நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும். ஆட்சேர்ப்பு செய்யப்படுவோர் விதவைகள் அநாதைகள் மற்றும் தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

* *வேறு தகைமைகள் :*

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) 2016.09.23 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்றவாறு போதிய உடல் மற்றும் உள ரீதியில் தகைமையானவராக இருத்தல் வேண்டும் ;

(உ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

* *விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முறை :*

* இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவுத் தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணபதாரரின் கையெழுத்திலேயே விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

இலக்கம் 1 முதல் 8 வயையான தலைப்புக்களை 1 ஆவது பக்கத்திலும் இலக்கம் 9 முதல் 11 வரையான தலைப்புக்களை 2 ஆவது பக்கத்திலும் இலக்கம் 12 முதல் 14 வரையான தலைப்புக்களை 3 ஆவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பட்டிவத்தை தயாரித்தல் வேண்டும்.

* உரிய மாதிரிக்கமைவாக தயாரித்த விண்ணப்ங்களை 2016.09.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பணிப்பாளர், தேசிய நூதனசாலைகள் திணைக்களம், த. பெ. 854, ஶ்ரீமத் மாக்கஸ் பிரனாந்து மாவத்தை, கொழும்பு 7'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

* உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

* விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''......................... பதவிக்கான ஆட்சேர்ப்பு'' என தான் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

* *கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-* வணக்கத் தலத்திற்கு பொறுப்பான மதகுரு/ சமாதான நீதவான்/அரசாங்கப் பாடசாலை அதிபர்/அல்லது 2,40,360 ரூபாவிற்கு குறையாத ஆரம்ப வருடாந்த சம்பளத்திற்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் சேவையாற்றும் அரசாங்கத்தின் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

* *வேறு.-* இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத விடயம் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு தொடர்பிலும் நூதனசாலைகள் பணிப்பாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பணிப்பாளர்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

இலக்கம் 854, ஶ்ரீமத் மாக்கஸ் பிரனாந்து மாவத்தை,
கொழும்பு 7,
2016, ஓகத்து 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் ...................... ........................................... பதவிக்கான விண்ணப்பம்**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரி :
(i) பிரத்தியேக முகவரி :----.
(ii) மாவட்டம் :----.
(iii) அலுவலக முகவரி (தொழில் புரிபவராயின்) : ----.

3. தொலைபேசி இலக்கம் :
பிரத்தியேக :----.
அலுவலகம் :----.

4. பிறந்த திகதி :----.

2016.09.23 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் :----.

7. விவாகமானவர்/ விவாகமாகாதவர் :----.

8. குடியுரிமை :
பரம்பரையின் மூலம்/ பதிவின் மூலம்

9. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.) பரீட்சை :
சுட்டெண் :----, வருடம் :----. மொழி மூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| (1) .................................... | ............ |
| (2) .................................... | ............ |
| (3) .................................... | ............ |
| (4) .................................... | ............ |
| (5) .................................... | ............ |
| (6) .................................... | ............ |
| (7) .................................... | ............ |
| (8) .................................... | ............ |

10. தொழில்சார் அறிவு மற்றும் திறன்கள் குறித்த விபரங்கள் :

| பாடநெறி | நிறுவனம் | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

**கவனிக்க.**- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

11. அனுபவம் குறித்த விபரங்கள் :

| பதவி | நிறுவனம் | சேவையாற்றிய காலம் |
|---|---|---|
| | | |

12. தற்போது ஏதேனும் பதவி வகிப்பின் அது குறித்த விபரங்கள் :

(1) பதவி மற்றும் தரம் :----.
(2) நியமனம் பெற்ற திகதி :----.
(3) நிறுவனம் :----.
(4) ஓய்வூதியத்துடனான பதவியா ? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இத்தகவல்கள் பொய்யானவை எனவும், தவறானவை எனவும் தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவரின் நான் தகைமையற்றவர் என்பதையும், நியமனத்தின் பின்னர் பொய்யானவை எனவும் தவறானவை எனவும் தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் உறுதிப் படுத்தல் :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள ............... எனும் பெயரையுடையவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

14. அரச சேவை/ மாகாண சேவையைச் சார்ந்த ஊழியர் எனில், திணைக்களத் தலைவரின் சான்றுரை :

திரு./ திருமதி/ செல்வி ...................... இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர ஊழியராக சேவையாற்று கின்றார் என்பதையும், இப்பதவிக்காக தெரிவுசெய்யப் பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத்தருகிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

9-157

## திருத்தம்

### விளையாட்டுத்துறை அமைச்சு

விளையாட்டு வைத்திய நிறுவகம்

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்த விளையாட்டு வைத்திய நிறுவகத்தில் காணப்படும் வைத்தியப் பணி சார்ந்த துணை மருத்துவர் சேவைப்பிரிவின்கீழ், இயன் மருத்துவர் பதவி Physical therapist)/மருந்தாக்குநர்/வைத்திய இரசாயனகூட தொழில்நுட்ப நிபுவணத்துவப் பதவிகளின் வெற்றிடத்திற்காக 2016, ஓகத்து 5 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரும் இலக்கம் 6, கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2016.09.13 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய

2016.09.13 ஆந் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர், ''செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சு, இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07'' எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**வயதெல்லை.**- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதைவிடக் குறையாது இருக்க வேண்டியதுடன் 35 வயதைவிட மேற்படாதிருக்க வேண்டும். ஏற்கனவே அரசு சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பளம் கொண்ட நியமனதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை அமுலில் இருக்காது.

கலாநிதி டி. எம். ஆர். பி. திசாநாயக்க,
செயலாளர்,
விளையாட்டுத்துறை அமைச்சு.

விளையாட்டுத்துறை அமைச்சு,
இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7.

9-182/ 1

---

திருத்தம்

**விளையாட்டுத்துறை அமைச்சு**

விளையாட்டு வைத்திய நிறுவகம்

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்த விளையாட்டு வைத்திய நிறுவகத்தில் காணப்படும் போசாக்கு உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்திற்காக 2016, ஓகத்து 5 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரும் இலக்கம் 5, கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2016.09.13 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2016.09.13 ஆந் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர், ''செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சு, இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07'' எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**வயதெல்லை.**- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப் பேற்கும் இறுதித் திகதியன்று 21 வயதைவிடக் குறையாது இருக்க வேண்டியதுடன் 35 வயதைவிட மேற்படாதிருக்க வேண்டும். ஏற்கனவே அரசு சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பளம் கொண்ட நியமனதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை அமுலில் இருக்காது.

கலாநிதி டி. எம். ஆர். பி. திசாநாயக்க,
செயலாளர்,
விளையாட்டுத்துறை அமைச்சு.

விளையாட்டுத்துறை அமைச்சு,
இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7.

9-182/ 2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016 ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இலக்கம் 1225/ 32 ஆம் இலக்க 2002.03.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

*பரீட்சை ஒழுங்குவிதிகள் :*

(அ) முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

பாட இலக்கம் 1 *பொது நிர்வாகம்.*- இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவையின் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்கு விதிகள், ஒழுங்குக்கோவைகள்

பாட இலக்கம் 2 நிதி

பாட இலக்கம் 3 கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை

(ஆ) உத்தியோகத்தர் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே அமர்வில் அல்லது தனித்தனியான பாடங்களாகவும் தோற்ற முடியும்.

(இ) சகல வினாப்பத்திரங்களுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.

3. **பாடவிதானம் :**

(1) *பொது நிர்வாகம் :*

(அ) இலங்கை (யாப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (973 ஆவது வாசகம்),
1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (349 ஆவது வாசகம்),

1972 ஆம் ஆண்டின் மே 22 ஆந் திகதி விதிக் கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு,
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கம் கொண்ட வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு.

(ஆ) அலுவலக மற்றும் துறைசார் ஒழுங்கமைப்பு திட்டம், தாபன விதிக்கோவைகள் மற்றும் அரசின் ஏனைய ஒழுங்குவிதிகள்
தாபனவிதிக்கோவையின் வாசகங்கள்
I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) *நிதி :*

(அ) அரச நிதிக் கோவையின் 1 ஆம் பகுதி (1 ஆவது வாசகத்தைத் தவிர)

(ஆ) நடைமுறை ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு (உ-ம்) அவற்றின் தயாரிப்புக்கள், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப் படும் கணக்குப் பணிகளுக்கு உரியதான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) *கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற் பார்வை :*

(அ) *கல்விச் சட்டம் :*
பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சீர்திருத்தப்பட்ட கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சீர்திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சீர்திருத்தச் சட்டம்
* அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு
* 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள் (திருத்தம்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்-திருத்தம்) சட்டம்
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(ஆ) *கல்வி நிருவாகம் :*

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) மாவட்டத் திணைக்களம் உட்பட அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங் கமைப்பும் செயற்பாடுகளும்
(iii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடலின் நோக்கம், திட்டங்களை (பாடசாலைத் திட்ட மிடல்கள் உட்பட) அமுல்படுத்தல் போன்றன

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்கள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
(4) விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) *கல்வி மேற்பார்வை :*

* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள்
* பாடசாலையில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளின் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்

* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வைகள்
* வெளிக்குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வைகள்

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவகம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவ கலைமுறைகள்
* கருத்தரங்கு அறிக்கைகள் - புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலையை நடாத்துதல்-டெம்பிள் ஸ்மித், லண்டன்
* புஷ் டீ கிளேட்டர், ஆர். குட் மற்றும் சீ றிவேர்ஸ் (1980) பாடசாலை
* முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் காப்பர் மற்றும் றோ
* கலாநிதி கான் முகைதீன் ஸரீப் (1983)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் அமைச்சின் நூற்றாண்டுக் குழு II ஆவது மற்றும் III ஆவது பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கை வகுப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தலைமைத்துவம் (ஈ 323 பாடநெறியின் 4 ஆவது பகுதி), திறந்த பல்கலைக்கழக யுனிவர்சிட்டி பிறஸ், லண்டன், சிப்மன், மார்டன் (1983) பாடசாலை மதிப்பீடு கய்ஸ்மன் கல்வி நூல் லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத்துவ மறுசீரமைப்புத் தொடர்பான அறிக்கை - 1984

4. ஒவ்வொரு பாடங்களுக்குரிய மொத்தப் புள்ளிகளின் அளவு 100 ஆகும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடங்களில் 40 வீதம் புள்ளிகள் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. **பரீட்சை மொழிமூலம்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் நடைபெறும்.

(ii) பரீட்சார்த்திக்கு அரச கரும மொழி அல்லது தேசிய மொழி ஆகிய ஒரு மொழி மூலம் விடையளிக்க முடியும்.

(iii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைவதற்கு முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்துகொண்டவர்கள் தொடர்பில் அரச சேவையில் பிரவேசிப்பதற்கு தகைமை பெற்ற மொழி மூலம் விடையளிக்க முடியும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி தன்மை இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

7. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் 1 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 2 ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.) சிங்கள விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொள்ளவும்.

8. (i) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

(ii) *பரீட்சை முடிவுகள்.-* பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பரீட்சை முடிவுகள் உள்ளடக்கப்பட்ட ஆவணம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும்.

9. விண்ணப்பப்படிவங்கள், 2016.10.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், தபால் பெட்டி இலக்கம்

1503, கொழும்பு'' என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இக்குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்கும் தினமன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் உரியதாயின் அதற்குரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுடன் சரியாகப் பூர்த்திசெய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியையும் உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் (தொலைநகல் இல. 011-2784232). தாங்கள் கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேலே 10 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்திசெய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. (i) சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ''உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு தபாலகம்/ உப தபாலக அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)''.

(அ) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது).

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | ரூ. 1,000 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 500 |

14. (i) பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொண்டல்ல என்பதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

(ii) பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையிலான மாற்றங்களில் ஒப்பீடற்ற நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய செயற்பட வேண்டும்.

16. இவ்வறிவித்தல் மூலம் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

டபிள்யு. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2016, ஒகத்து 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016**

First Efficiency Bar Examination For Officers in Grade III of The Sri Lanka Educational Administrative Service - 2016

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிடவும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

2. முகவரி :

(i) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) அலுவலக முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.
(iii) சொந்த முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.
(iv) தொலைபேசி இலக்கம் :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. அறிவித்தலின் (02) ஆவது வாசகத்தின் பிரிவு (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் தோற்றும் பாடங்கள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

பாட இலக்கம் ☐☐☐ பாடம் :----.

பாட இலக்கம் ☐☐☐ பாடம் :----.

பாட இலக்கம் ☐☐☐ பாடம் :----.

5. ஆண்/ பெண் பால் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

7. (i) பதவிப்பெயர் :----.

(ii) திணைக்களம்/ வலயக்கல்வி அலுவலகம்/ கோட்டக் கல்வி அலுவலகம்/ பாடசாலை :----.

8. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்தப்பட்ட நிதி :----.

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டவும். (போட்டோ பிரதியை வைத்திருக்கவும். உரியதாயின் மாத்திரம்)

10. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கிறேன்.

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் விண்ணப்பப்படிவத்தில் அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப் பட்டுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன். (*)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவிப்பெயர் மற்றும் பதவி முத்திரை :

திகதி :----.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் நீக்கி விடவும்.

9-86

---

## உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள்/ அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பாக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள்/ அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

3. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது பணியாற்றுகின்றவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது. (அதற்கமைய வயது சம்பந்தமாக தகைமை பெறுவது விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1998.10.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1981.10.03 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராக இருப்பின் மாத்திரமாகும்.)

4. **கல்வித் தகைமைகள்.**- மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்கலாக இரு தவணைகளுக்கு மேற்படாது ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. **தொழில் தகைமைகள்.**- மேற்படி கல்வித் தகைமை களுடன் தேசிய தொழில் தகைமைகளின் (NVQ) 5 ஆம் மட்டத்தில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (சிவில் பொறியியலாளர்) சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **சம்பள அளவுத்திட்டம்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன்கீழ் (MT 1-2016A) இற்கமைய,

ரூபா 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 48,890 ஆவதுடன், அச்சம்பளம் 2020.01.01 ஆந் திகதியில் இருந்தே உரித்தாகின்றது. இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க அலுவலர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளும் செலுத்தப்படும். 2 ஆவது வகுப்பிற்கு நியமனம் பெற்று 3 ஆண்டுகளுள் 2 ஆவது வகுப்பின் முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4 ஆவது சம்பள ஆண்டேற்றத்தைப் பெறுவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் நியமனம் பெற்று 5 ஆண்டுகளைத் தாண்ட முன்னர் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கு இணையொத்த சுற்றறிக்கைக்கு அமைய குறித்த மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

(2) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தற்றுணிவின் பேரில் மாவட்டச் செயலகம்/ அரசாங்க அதிபரின் அலுவலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு இணைக்கப்படுவர்.

(3) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(4) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மூன்றாண்டுகால தகுதிகாண் காலத்துக்கு கீழ்ப்பட வேண்டியதுடன், ஏற்கனவே பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அரசாங்க சேவையாளராயின், ஓராண்டுகால பதில் கடமை புரியும் காலத்திற்கு கீழ்ப்படுவர்.

(5) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தாபனக் கோவையினதும் நிதிப் பிரமாணத்தினதும் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகள், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் கட்டளைகள் மற்றும் திணைக்கள ஆலோசனைகளுக்கு கீழ்ப்பட்டு பணியாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

9. (i) **ஆட்சேர்ப்பு முறை**.- இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரினால் 2016, திசெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

(ii) **பரீட்சைத் திட்டம்** :

(அ) பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.

(இ) பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

(iii) பரீட்சைக்கான பாடங்கள்.- பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) நுண்ணறிவு
(2) தொழில்நுட்ப வினாத்தாள்

10.

10.1 ***பாடவிதானம் :***

(1) நுண்ணறிவுப் பரீட்சை - காலம் : 1 மணித்தியாலம் ஆகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாள் பகுப்பாய்வுத் திறனை தீர்மானித்தல், முடிவெடுத்தல் ஆகியன தொடர்பான 5 வினாக்களைக் கொண்டுள்ளது. இவ்வினாக்கள் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியில் அமைந்துள்ளதுடன், அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) தொழில்நுட்ப வினாத்தாள் - காலம் : 3 மணித்தியாலம் ஆகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாள், கட்டிட நிர்மாணக் கோட்பாடு, நிர்மாண பணிகள் தொடர்பான வரைபடம் தயாரித்தல் மற்றும் வாசித்து உணர்ந்துகொள்ளல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் முறைகள் ஆகியன தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை ஆராயும் வகையிலான வினாக்களைக் கொண்டுள்ளது. அத்துடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

10.2 மேற்படி ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாகவும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களைத் தெரிவுசெய்து அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கமைய ஆட்சேர்ப்பு தொடர்பான முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படும்.

* மேற்படி வினாத்தாளுக்கு விடையளிக்கும் பொருட்டு தேவையான வடிவியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்கு எடுத்து வருதல் வேண்டும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தை மிகக் கவனமாகவும், மிகச் சரியாகவும் பூர்த்திசெய்தல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலோ தெரியவரும் பட்சத்தில் பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மைக்குப் புறம்பானதென தெரியவரும் பட்சத்தில் அரசாங்க சேவையில் இருந்து விலக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச்சீட்டு வழங்குவது என்பதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகலவிதமான தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

12. (i) **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இத்தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு நாட்டின் எந்தவொரு அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்துக்கும் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை தங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. அத்துடன் மணி ஓடர் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) **பரீட்சைப் பெறுபேறு**.- இப்பரீட்சைக்குத் தோற்றி மேலே 10.2 பந்திக்கமைய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் பெயர் உள்ளடங்கிய பெறுபேறு அட்டவணை செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் அல்லது www. result.exam.gov.lk இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பிரசுரிப்பதன் மூலம் அறிவிக்கப்படும்.

13. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் ஏ4 (21 x 29 செ. மீ.) (சாதாரண ஹாப்சீட்) கடதாசியில்,

(i) இலக்கம் 1 இலிருந்து 3 வரையிலான பந்திகள் முதலாவது பக்கத்திலும்,

(ii) இலக்கம் 4 இலிருந்து ஏனைய பந்திகள் மற்றைய பக்கங்களிலும்,

அமையும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(iii) மாதிரிப் படிவத்தை ஒத்திராத விண்ணப்பப் படிவங்களும், முழுமையாகப் பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016, ஒற்றோபர் 3 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
தபால் பெட்டி இல. 1503, கொழும்பு.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, "உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016" எனக் குறிப் பிடப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் 12 ஆம் தலைப்பின்கீழ் தமது திணைக்களத் தலைவரினூடாக சான்றுப்படுத்திய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டியது இன்றிமையாததாகும். "விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச் சீட்டிலும் விண்ணப்ப தாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், அப்பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் அல்லது ரூபா 2,40,360 வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்."

(ஈ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரி களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிச்சீட்டுக்கள் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதிச்சீட்டுக்கள் வெளியிடப்பட்ட வுடனே அது பற்றி பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை இடம்பெறும் திகதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, பரீட்சார்த்தி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தமது முழுப்பெயர், தேசிய ஆள்டையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை மிகச் சரியாகக் குறிப்பிடுதல்

வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் தொலைநகல் ஒன்றின் மூலம் அனுமதி அட்டையின் பிரதியைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள வசதியுள்ள பரீட்சார்த்திகள் தொலைநகல் இலக்கத்துடன், கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துடன் தொடர்புகொண்டு விசாரித்தறிந்து கொள்வது பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது, தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாகும்.

(உ) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன், பரீட்சை தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவ்வாறு சான்றுப் படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கையொப்பம் உறுதிப்படுத்தப்படாத அனுமதி அட்டை இன்றி, பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஊ) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு வழங்குவது என்பதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகலவிதமான தகைமை களையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

14. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் இருப்பின், அது சம்பந்தமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவர்.

16. இவ்வர்த்தமானியில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் இடையில் ஏதும் வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமையவே நடவடிக்கை எடுக்கப்படும்.

நீல் த அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, ஓகத்து 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள்/ அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

Open Competitive Examination for Recruitment to the Post of Technical Assistant (Grade III) to be appointed for the service at District Secretariat/Office of the Government Agent and Divisional Secretariats under Ministry of Home Affairs - 2016

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1. பெயர் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWADHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும், ஏனைய பெயர் களின் முதலெழுத்துக்கள் இறுதியிலும் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(உதா : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 தபால் நகரம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

3. 3.1 பால் நிலை :
ஆண் - 0
பெண் - 1
(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு □□□□ மாதம் □□ திகதி □□

3.3 2016.10.03 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் □□ மாதங்கள் □□ நாட்கள் □□

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டு மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 2. | |
| 3. | | 4. | |
| 5. | | 6. | |
| 7. | | 8. | |
| 9. | | 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் (சித்தியடைந்திருப்பின்) :

(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டு மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவனம் | பாடநெறி | கால எல்லை | சித்தி | சான்றிதழ் இல. மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6. பிற தகைமைகள் :----.

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவராயின்,

7.1 திணைக்களத்தின்/ நிறுவனத்தின் முகவரி :----.
7.2 தற்போது வகிக்கின்ற பதவி :----.
7.3 சேவைக்காலம் :----.
7.4 நிரந்தர ஓய்வூதிய உரித்துடையதா அல்லது தற்காலிகமானதா என்பது பற்றி :----.

8. தாங்கள் எச்சந்தர்ப்பத்திலாவது அல்லது எவ்வித குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்பட்டுள்ளீரா ? (குறித்த கூட்டில் புள்ளியிடவும்), (ஆம் எனில் விளக்குக) :----.

ஆம் □ இல்லை □

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இங்கு சில பகுதிகளை நிரப்பாது விடல் அல்லது பிழையாக நிரப்பியிருப்பின் அதன் மூலம் நேரிடுகின்ற பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் இங்கு உறுதியுரைக்கப்பட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரியவரும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவதுடன் மற்றும் நியமனம் கிடைத்ததன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து விலக்குவதற்கு கட்டுப்படுகின்றேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன் என்பது பற்றியும் உறுதியுரைக்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திலும் பின்னர் எதுவித மாற்றமும் செய்ய மாட்டேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், ................ ................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச்

செலுத்தியுள்ளார் எனவும், அப்பற்றுச்சீட்டினை இங்கு கழறாதவண்ணம் ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையிடவும்.)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

12. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலர் ஒருவராயின், திணைக்களத் தலைவரின் சான்றுரை :

திரு./ திருமதி/ செல்வி .............................................. என்பவரது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமய அலுவலராக சேவையாற்றுகின்றார் எனவும், இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படின் அவ்வலுவலரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பது பற்றியும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்.)

9-186

---

## உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள் / அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

1. மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பாக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சன் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள் / அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் நிலவுகின்ற இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான 406 வெற்றிடங்கள் தொடர்பாக தொழிநுட்ப அலுவலர் பதவியின் III ஆம் தரத்தின் அல்லது பயிற்சித் தரத்தின் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவர்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேணடும். தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்றவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதாகாது.

4. 2016.10.03 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணபதாரிகள் மாத்திரம் பதவிகளுக்குத் தகைமையுடையவர்களாகக் கருதப்படுவர் :

(அ) III ஆம் தரம்.- கல்வித் தகைமைகள் :

(i) சிங்கள/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் உடன் விஞ்ஞானப் பாடத்திற்குரிய மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில் தகைமைகள்.- 4 (அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் பின்வரும் தொழில்துறை தகைமைகளில் ஒன்றையேனும் விண்ணப்பதாரிகள் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத் தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியலாளர் தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் வழங்கப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாவது பகுதியை சிறப்பாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(vi) மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமான இலங்கை தொழில்நுட்ப சபையினால் வழங்கப்படும் பிற தகைமைகள் :

(ஆ) பயிற்சித் தரம் (ஓராண்டு பயிற்சி தொடர்பாக).- கல்வித் தகைமைகள் :

(i) சிங்கள/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் உடன் விஞ்ஞானப் பாடத்திற்குரிய மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்துறை தகைமைகள் :

(i) மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இருந்து பதவிக்குரியதான துறைசார் பாடநெறியொன்றை முனைப்புடன் பூர்த்திசெய்து தொழில்நுட்ப சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் (உதாரணம் : தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில்/ மின்/ பொறிமுறை) ;

அல்லது

(ii) மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இருந்து வடிவமைப்பு தொடர்பாக ஓராண்டுகால முழுமையான பயிற்சி பாடநெறியை முனைப்புடன் பூர்த்திசெய்து உரிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இருந்து பதவிக்குரியதான துறைசார் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றை முனைப்புடன் பூர்த்திசெய்து தொழில்நுட்ப சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iv) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களைக் கேட்டறிந்ததன் பின்னர், மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்துறை கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பிற தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

* திறந்த போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகள், சேவைக்கு உரியதான பாடப்பரப்பிற்கமைய பெற்றுக்கொள்ளும் ஓராண்டு கால கோட்பாட்டு ரீதியானதும், பிரயோக ரீதியானதுமான பயிற்சியை முனைப்புடன் பூர்த்தி செய்து குறித்த பரீட்சையில் சித்தியடைந்ததாக குறித்த நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் III ஆம் தரத்தின் சம்பளத் திட்டத்தின் ஆரம்ப படிமுறையில் வைக்கப்படும்.

* பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பின், அவர்களுக்கு 6 மாத காலத்திற்குக்

குறையாத காலம் தமது பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடிக்கப்படும் கால எல்லையின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களின் சேவை இடைநிறுத்தப்படும்.

5. **சம்பள அளவுத்திட்டம்** :

(அ) III ஆம் தரம் - பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன்கீழ் (MN 3-2016) இற்கமைய,

ரூபா 31,040 - 445 x 10 - 600 x 11 - 730 x 10 - 750 x 10 - ரூபா 57,550 ஆவதுடன், அச்சம்பளம் 2020.01.01 ஆந் திகதியில் இருந்தே உரித்தாகின்றது. இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க அலுவலர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

4 ஆவது சம்பள ஆண்டேற்றத்தைப் பெறுவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் III ஆம் தரத்தில் நியமனம் பெற்று 5 ஆண்டுகளைத் தாண்ட முன்னர் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கு இணையொத்த சுற்றறிக்கைக்கு அமைய குறித்த மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) பயிற்சித்தரம்.- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன்கீழ் அட்டவணை V இற்கமைய மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

(2) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தற்றுணிவின் பேரில் மாவட்டச் செயலகம்/அரசாங்க அதிபரின் அலுவலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு இணைக்கப்படுவர்.

(3) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(4) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மூன்றாண்டுகால தகுதிகாண் காலத்துக்கு கீழ்பட வேண்டியதுடன், ஏற்கனவே பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அரசாங்க சேவையாளராயின், ஓராண்டுகால பதில் கடமை புரியும் காலத்திற்கு கீழ்ப்படுவர்.

(5) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தாபனக் கோவையினதும் நிதிப் பிரமாணத்தினதும் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திணைக்கள ஆலோசனைகளுக்கு கீழ்ப்பட்டு பணியாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

7. (i) **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கின் அடிப்படையிலும், நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமையவும் ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் 2016, திசெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

(ii) **பரீட்சைத் திட்டம்** :

(அ) பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.

(இ) பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப் படும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக் கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

(iii) பரீட்சைக்கான பாடங்கள்.- பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) நுண்ணறிவு,
(2) விடயசார் தொழில்நுட்ப பரீட்சை.

**குறிப்பு**.- ஆட்சேர்க்கப்படுகின்ற III ஆம் தரத்திற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக அமையாதவிடத்து, மேற்படி 4(ஆ) இன்கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள, பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகள் தொடர் வெற்றிடங்களுக்கு பயிற்சித் தரத்திற்கு உட்படுத்தப்படுவர்.

8. ***பாடவிதானம் :***

(1) நுண்ணறிவுப் பரீட்சை :

காலம் : 1 மணித்தியாலம் ஆகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாள் தர்க்க ரீதியான சிந்தனை ஆற்றல் மற்றும் சிந்தனை ரீதியான பகுப்பாய்வுத் திறனை தீர்மானிக்கும் ஆற்றல், முடிவெடுத்தல் ஆகியன தொடர்பான வினாக்களைக் கொண்டுள்ளது.

(2) விடயசார் தொழில்நுட்பப் பரீட்சை -

காலம் : 3 மணித்தியாலம் ஆகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாள், கட்டிட நிர்மாணக் கோட்பாடு, நிர்மாணப் பணிகள் தொடர்பான வரைபடம் தயாரித்தல் மற்றும் வாசித்து உணர்ந்துகொள்ளல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் முறைகள் ஆகியன தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை ஆராயும் வகையிலான வினாக்களைக் கொண்டுள்ளது. அத்துடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

* மேற்படி ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாகவும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களைத் தெரிவு செய்து அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கமைய ஆட்சேர்ப்பு தொடர்பான முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படும்.

* மேற்படி வினாத்தாளுக்கு விடையளிக்கும் பொருட்டு தேவையான வடிவியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்கு எடுத்து வருதல் வேண்டும்.

9. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தை மிகக் கவனமாகவும், மிகச் சரியாகவும் பூர்த்திசெய்தல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலோ தெரியவரும் பட்சத்தில் பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மைக்குப் புறம்பானதென தெரியவரும் பட்சத்தில் அரசாங்க சேவையில் இருந்து விலக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச்சீட்டு வழங்குவது என்பதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகலவிதமான தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இத்தொகையை " பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்", எனும் பெயருக்கு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் கணக்கு இலக்கம் 02323278 இற்கு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை தங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் ஏ4 (21 x 29 செ. மீ.) (சாதாரண ஹாப்சீட்) கடதாசியில்,

(i) இலக்கம் 1 இலிருந்து 3 வரையிலான பந்திகள் முதலாவது பக்கத்திலும்,

(ii) இலக்கம் 4 இலிருந்து ஏனைய பந்திகள் மற்றைய பக்கங்களிலும்,

அமையும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(iii) மாதிரிப் படிவத்தை ஒத்திராத விண்ணப்பப் படிவங்களும், முழுமையாகப் பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016, ஒற்றோபர் 3 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்,
இல. 28/ 10, மலலசேக்கர மாவத்தை,
கொழும்பு 7.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, "உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்ட செயலகம்/ அரசாங்க அதிபர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் 12 ஆம் தலைப்பின்கீழ் தமது திணைக்களத் தலைவரினூடாக சான்றுப்படுத்திய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டியது இன்றிமையாததாகும். "விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச் சீட்டிலும் விண்ணப்ப தாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், அப்பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் அல்லது ரூபா 2,40,360 இற்கு குறையாத வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்."

(ஈ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதிச் சீட்டுக்கள் வெளியிடப்பட்டவுடனே அது பற்றி சகல விண்ணப்பதாரிகளுக்கும் குறுஞ்செய்தி மூலம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அறிவிக்கப்படும். அவ்வறிவித்தல் கிடைக்கப்பெற்று ஒரு வாரம் கடந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், இலக்கம் 0115-980236 ஊடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்தி அது சம்பந்தமான விடயங்களையும், அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

(உ) அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன், பரீட்சை தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கையொப்பம் உறுதிப்படுத்தப்படாத அனுமதி அட்டை இன்றி, பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது

(ஊ) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு வழங்குவது என்பதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகலவிதமான தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

12. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் இருப்பின், அது சம்பந்தமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவர்.

நீல் த அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்கள்/ அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

| பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் : | | விண்ணப்பிக்கின்ற மொழி மூலம் : | |
|---|---|---|---|
| சிங்களம் - 2<br>தமிழ் - 3 | ☐ | தரம் III - 1<br>பயிற்சித் தரம் - 2 | ☐ |
| (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.) | | (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.) | |

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(உதா : GUNAWARDHANA, H. M. S. K.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWADHANA)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 தபால் நகரம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.5 தொலைபேசி இலக்கம் :
(கையடக்க) :----.
நிலையான :----.

2.6 மின்-அஞ்சல் முகவரி :----.

3. 3.1 பால் நிலை :
ஆண் - 0
பெண் - 1
(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2016.10.03 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டு மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சை சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 2. | |
| 3. | | 4. | |
| 5. | | 6. | |
| 7. | | 8. | |
| 9. | | 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் (சித்தியடைந்திருப்பின்) :

(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டு மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சைச் சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவனம் பாடநெறி | கால எல்லை | சித்தி | சான்றிதழ் இல. மற்றும் திகதி |
|---|---|---|---|
| | | | |

6. பிற தகைமைகள் :----.

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவராயின்,

7.1 திணைக்களத்தின்/ நிறுவனத்தின் முகவரி :----.

7.2 தற்போது வகிக்கின்ற பதவி :----.

7.3 சேவைக்காலம் :----.

7.4 நிரந்தர ஓய்வூதிய உரித்துடையதா அல்லது தற்காலிகமானதா என்பது பற்றி :----.

8. தாங்கள் எச்சந்தர்ப்பத்திலாவது அல்லது எவ்வித குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதுப்பட்டுள்ளீரா ? (குறித்த கூட்டில் ✓ புள்ளியிடவும்), (ஆம் எனில் விளக்குக) :----.

ஆம் ☐ இல்லை ☐

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இங்கு சில பகுதிகளை நிரப்பாது விடல் அல்லது பிழையாக நிரப்பியிருப்பின் அதன் மூலம் நேரிடுகின்ற பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் இங்கு உறுதியுரைக்கப்பட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரியவரும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவதுடன் மற்றும் நியமனம் கிடைத்த தன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து விலக்குவதற்கு கட்டுப்படுகின்றேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன் என்பது பற்றியும் உறுதியுரைக்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திலும் பின்னர் எதுவித மாற்றமும் செய்ய மாட்டேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அப்பற்றுச்சீட்டினை இங்கு கழறாதவண்ணம் ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையிடவும்.)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

12. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலர் ஒருவராயின், திணைக்களத் தலைவரின் சான்றுரை :

திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமைய அலுவலராக சேவையாற்றுகின்றார் எனவும், இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படின் அவ்வலுவலரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பது பற்றியும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்.)

9-187

---

**விவசாய அமைச்சு**

விவசாயத் திணைக்களம்

***விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவை பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016***

விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் பொறியியல் உதவியாளர் (சிவில்), பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல்) பொறியியல் உதவியாளர் (மின்) ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016, செத்தெம்பர் 30 ஆகும்.

*2.1 திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் :*

2.1.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2016, செத்தெம்பர் 30 ஆந் திகதியில் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கேற்ப, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1998.09.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாகவும், 1986.09.30 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியாகவும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

2.1.2 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| 1<br><br>2<br><br>3. | பொறியியல் உதவி யாளர் (சிவில்)<br><br>பொறியியல் உதவி யாளர் (இயந்திர வியல்)<br><br>பொறியியல் உதவி யாளர் (மின்) | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமை சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றி ருத்தல். | பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங் களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சை யில் ஒரே அமர் வில் சித்தி அடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் பொது பரீட்சை நீங்கலாக) | கீழ்வரும் தகைமை களில் பதவிக்கு உரித்தான துறையில் தொழில்சார் தகைமை பெற்றிருத்தல் வேண்டும் :<br>(i) மொரட்டுவை பல்கலைக் கழகம் அல்லது ஹாடி தொழில் நுட்பவியல் டிப்ளோமா நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா அல்லது<br>(ii) தேசிய பயிலுநர் தொழில் பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்ளோமா அல்லது<br>(iii) கல்வி உயர் கல்வி அமைச்சால் வழங்கப்படும் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா அல்லது |

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| | | | | (iv) இலங்கை திறந்த பல்கலைக்கழ கத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது (v) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை சிறப்பாகப் பூரணப்படுத்தி இருத்தல். (vi) தொழில் துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழிற் திறன் (NVQ) மட்டத்திலான தகைமைகளை பூரணப்படுத்தி இருத்தல் அல்லது (vii) உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவ னங்களிலிருந்தும் தேவையான ஆலோசனை களைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு |

| *பதவிக்குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *2.1.3 கல்வித் தகைமைகள்* | | *2.1.4 தொழிற் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | *க.பொ.த. (சா. த.)* | *க.பொ.த. (உ. த.)* | |
| | | | | சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலை கல்வி தொழிற் கல்வி ஆணைக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

2.1.5 *ஏனைய தகைமைகள்.-* அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

ஏதேனும் சமயப் பிரிவில் கடமையாற்றுபவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் களாவர் ;

நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்காக பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.2 *மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :*

*2.2.1*

| *பதவிக்குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *2.2.2 கல்வித் தகைமைகள் க. பொ. த. (சா. த.)* | *2.2.3 தொழிற் தகைமைகள்* | *அனுபவம்* |
|---|---|---|---|---|
| 1 | பொறியியல் உதவி யாளர் (சிவில்) | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற் படாத அமர்வுகளில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் | கீழ்வரும் தகைமைகளில் பதவிக்கு உரித்தான துறையில் தொழில்சார் தகைமை பெற்றிருத்தல் வேண்டும் : (i) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது ஹாடி தொழில்நுட்ப வியல் நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா அல்லது (ii) தேசிய பயிலுநர் தொழில்பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் பொறி யியல் தேசிய டிப்ளோமா அல்லது | உரிய துறையில் நிரந்தர திணைக்களப் பதவி ஒன்றில் தொழில்சார் தகைமைகளுடன் 5 வருட செயல்வலு கொண்ட திருப்திகர மான சேவைக் காலத்தைப் பூரணப் படுத்தியிருத்தலும் பதவி நிரந்தரமாக் கப்பட்டிருத்தலும் |
| 2 | பொறியியல் உதவி யாளர் (இயந்திர வியல்) | | | |
| 3 | பொறியியல் உதவி யாளர் (மின்) | | | |

| *பதவிக்குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *2.2.2 கல்வித் தகைமைகள் க. பொ. த. (சா. த.)* | *2.2.3 தொழிற் தகைமைகள்* | *அனுபவம்* |
|---|---|---|---|---|
| | | | (iii) கல்வி, உயர் கல்வி அமைச்சால் வழங்கப் படும் பொறியியல் தேசிய உயர் டிப்ளோமா அல்லது<br>(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தி னால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது<br>(v) இலங்கைப் பொறி யியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறி யியல் பரீட்சையில் முதலாம் பகுதியை சிறப்பாகப் பூரணப் படுத்தியிருத்தல் அல்லது<br>(vi) தொழில் துறைக்கு ஏற்புடைய தான தேசிய தொழில் திறன் (NVQ) மட்டத்தி லான தகைமை களைப் பூரணப் படுத்தியிருத்தல் அல்லது<br>(vii) உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறு வனங்களிலிருந்தும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலை, கல்வி, தொழில் கல்வி ஆணைக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். | |

2.2.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் ;
(ii) உரிய தினத்திலே 5 வருட திருப்தியான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அலுவலர் அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருந்தால் மாத்திரம் சேவையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படும்.

4. திணைக்களத்தில் தற்போது காணப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 70% திறந்த போட்டிப் பரீட்சை மூலமும், 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் போதியளவு அடிப்படைத் தகைமைகளையுடைய உள்ளக விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்களத்திற்குள் இல்லாதவிடத்து எஞ்சிய எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சை மூலமும் தெரிவுசெய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து பூர்த்திசெய்யப்படும். மேலும், ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

***சம்பளமும் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையும்.-*** சம்பள குறியீட்டு இலக்கம் : எம். என். 03/ 2016ஏ

சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும்.

III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் முதலாவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 3 வருடங்களுக்குள் இரண்டாவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 5 வருடங்கள் தாண்டும் முன் III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் விதிக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினை பொ. நி. சு. 07/ 2007 இன் I (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் இரண்டாம் தர திறன் மட்ட மொழிக் கற்கைநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இவ்வரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையில் குறித்த காலப்பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

5. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். அரச கொள்கைகளுக்கேற்ப ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

(ii) குறித்தொதுக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) 1930/ 12 ஆம் இலக்க 2015.09.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை ஏ4 (21செ. மீ. x 29 செ. மீ.) அளவுடைய தாளை உபயோகித்து அதன் இரு பக்கத்திலும் அமையுமாறு இலக்கம் 1 முதல் 2 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 3 இல் இருந்து 6 வரை இரண்டாம் பக்கத்திலும் 7 முதல் 11 வரை 3 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 4 ஆம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரித்தல் வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தினால் எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (Photo state) பிரதியினை தம்வசம்

வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வர்த்தமானி அறிவுறுத்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளும் ஒரே பரீட்சையாக நடாத்தப்படுவதால் ஒரு விண்ணப்பதாரிக்கு திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க முடியாது. இதன்படி, விண்ணப்பதாரி ஒருவர் திறந்த/ மட்டுப்படுத்திய இரு பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) கீழே (எ) இல்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(உ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2016, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒருங்கிணைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016" எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரி ஒருவருக்கு ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். இதற்கான பரீட்சைக் கட்டணம் 750 ரூபா ஆகும். அப்பணத்தை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(ஐ) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவி நிலை அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலதிகமான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலை தரத்திலுள்ள அலுவலர் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(ஒ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஓ) விண்ணப்பத்தின் தொடர் இலக்கம் 7, 12 ஆகியன மட்டுப்படுத்திய பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும்.

**7. பரீட்சை நடைமுறை :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதற்கான

பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், நகரம், விண்ணப்பிக்கும் பதவிகள், விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்துடன் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தலும், பொருத்தமாயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழையும் கொண்ட, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்குவார். விண்ணப்பதாரி ஒருவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் தமது கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதாவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாகாது.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். பத்திரிகை அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியுடன் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தமது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (Fax) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) ***ஆளடையாளம்.-*** பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) ***பாடப்பரப்பு :***

(i) *விவேகப் பரீட்சை.-* (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) விடய அறிவுசார் வினாத்தாள் (2 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் விடய அறிவை மதிப்பிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும்.

| | பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|---|
| (1) | பொறியியல் உதவியாளர் (சிவில்) | கட்டிட நிர்மாணக்கலை/ கட்டமைக்கப்பட்ட வரைபு/ கட்டிட பொருட்கள் பற்றிய அறிவு/கட்டிட பரிமாண அளவை தயாரித்தல், மதிப்பீடு செய்தல்/ அளவையும் மட்டமெடுத்தலும்/ கட்டிட நிர்மாணம்/ கட்டமைப்பு/ சேவைகள்/ பாதுகாப்பு முறைகள்/ போதனா முறைகள். |
| (2) | பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல்) | மோட்டார் இயந்திரவியல்/ இயந்திர வரைபு/ வேலைத்தள இயந்திரங்கள்/ உலோக வேலைகள்/ பொருட்களின் பண்புகளும் எளிய கணிப்பீடுகளும்/ இயந்திரகூடம்/ உலோக ஒட்டு வேலை/ சவர அலகு கொல்ல வேலை/ பாதுகாப்பு முறைகள்/ போதனா முறைகள் |

| *பதவி* | *தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு* |
|---|---|
| *(3)* பொறியியல் உதவியாளர் *(மின்)* | மின் பிறப்பாக்கல் கோட்பாடுகள் பற்றிய அறிவு/மின் மோட்டார், மின் பிறப்பாக்க இயந்திர வகைகளும் அவற்றின் உபயோகமும், பழுது கண்டறிதலும் பழுதுபார்த்தல்களும்/ இரட்டை, மூனிலை மின்னி தொகுதிகளில் பயன்படுத்தும் கருவிகள் பற்றிய அறிவு/ வயர்களை இனங்காணுதல்/ கட்டிடங்களிலும் இயந்திர கூடங்களிலும் மின்னிணைப்பு வழங்குவதற்கான மதிப்பீடுகளை தயாரித்தல்/ Drawings தயாரித்தல்/ தொலைபேசி தொகுதிகளும் தொலைபேசி இணைப்புகளும் வழங்குவது பற்றி அடிப்படை அறிவு/ எளிய அலுவலக உபகரணங்களை பழுதுபார்ப்பதற்கான இலத்திரனியல் தொகுதிகள் பற்றிய அறிவு/ வாகனங்களில், விவசாய இயந்திரங்களில் மின் தொகுதிகள் பற்றிய அடிப்படை அறிவு/மல்டி மீட்டர் மற்றும் ஏனைய அளவை உபகரணங்களைப் பயன்படுத்துதல் பற்றிய அறிவு/ குளிரூட்டிகளும் குளிர்சாதனப் பெட்டிகளும் பற்றிய அடிப்படை அறிவு/ பாதுகாப்பு முறைகள்/ போதனா முறைகள். |

(ஊ) ***மொழி மூலம்.*** - இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) வர்த்தமானி அறிவித்தலின் தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் அனைவருக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

(ஏ) ***பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.*** - இப்பரீட்சை 2016, நவெம்பர் மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| *பரீட்சை நிலையம்* | *குறியீட்டு இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

8. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) மேற்கூறிய பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து அப்புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் ஊடாக தெரிவுசெய்யப்படுவர்.

(ii) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்து தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியில் தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(vi) போலியான தகவல்கள், திரிபுபடுத்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து நியமனத்தைப் பெற்றாலும் அதுபற்றி தெரியவந்தவுடன் அவரது நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படுவதோடு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(vii) *பெறுபேறுகளை வெளியிடல்.-* ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேல் பெற்று சித்தியடையும் பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலொன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியுடன் நேர்முகப் பரீட்சைக்காக வழங்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

10. மும்மொழிகளிலுமான இவ்வறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

கலாநிதி ஆர். ஆர். ஏ. விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2016, செத்தெம்பர் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிகளில் III ஆம் தரத்திற்கு நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

Application for Open/Limited Competitive Examination for Recruitment to Vacancies the Grade III of the Sri Lanka Technological Service in the Department of Agriculture

விண்ணப்பதாரி தோற்றும் பரீட்சை :

திறந்த 1
மட்டுப்படுத்திய 2

☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4

☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :

கொழும்பு - 1
கண்டி - 2

☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி :

| பதவி | பதவியின் இலக்கம் | விண்ணப்பிக்கும் பதவி | பதவியின் இலக்கம் |
|---|---|---|---|
| பொறியியல் உதவியாளர் (சிவில்) | - 01 | 01 | |
| பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல்) | - 02 | 02 | |
| பொறியியல் உதவியாளர் (மின்) | - 03 | 03 | |

1. பெயர் :-

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்):----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

1.5 தொலைபேசி இலக்கம் :----.

2. நிரந்தர முகவரி :-

2.1 ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

2.2 சிங்களத்தில்/ தமிழில் :----.

2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 வதியும் மாவட்டம் :----.

2.5 பிரதேச செயலகப் பிரிவு :----.

3. பால் :

(ஆண் - 0, பெண் - 1) ☐

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :

4.1 ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.3 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

விவாகமாகாதவர்- 1
விவாகமானவர் - 2 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டி னுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :

(அ) கல்வி பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சை :

(i) வருடமும் மாதமும் : ------------------------------
(ii) பரீட்சை சுட்டெண் : ------------------------------
(iii) மொழி மூலம் : ------------------------------
(iv) பரீட்சை முடிவுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) கல்வி பொதுத் தராதரப் (உ. த.) பரீட்சை :

(i) வருடமும் மாதமும் : ------------------------------
(ii) பரீட்சை சுட்டெண் : ------------------------------
(iii) மொழி மூலம் : ------------------------------
(iv) பரீட்சை முடிவுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6. தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் | டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. அனுபவம் :----.
(மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

7.1 தற்போது வகிக்கும் பதவி :----.
7.2 அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.
7.3 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
7.4 நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனானதுமான சேவைக்காலம் :----.
7.5 2015, ஆந் திகதி உடன் முன்னரான 5 வருட காலத்திற்குரிய அனைத்துச் சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளீரா ? :----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
   8.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.
   8.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
   8.3 செலுத்திய தொகை :----.

| |
|---|
| பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |

9. இப்பரீட்சை நிபந்தனைகள் அனைத்தையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும், அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

11.1 **ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக** (தேவையற்றதை கீறிவிடவும்).

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/ இல்லை எனவும் அவர் இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அத்துடன் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும் (பதவி முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

***(மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)***

*11.* ***பிரிவுத் தலைவர் கையொப்பம் :***

*திரு./திருமதி/செல்வி ............................................. என்பவர் .............................. ஆந் திகதி முதல் இதுவரை இப்பிரிவில் .. ............................... நிரந்தர பதவியில் கடமையாற்றுகிறார். அவரின் பணிகள், வரவு, நடத்தை என்பன திருப்திகரமானவை. அவர் ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்/ உட்படுத்தப்படவில்லை, மேலே 1 முதல் 10 வரை கூறப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.*

*விண்ணப்பத்தினைச் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.*

----,
*பிரிவுத் தலைவரின் கையொப்பம்.*

*9-181*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2016 |
| | | வெள்ளி | 09.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2016 |
| | | வியாழன் | 15.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2016 |
| | | வெள்ளி | 23.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2016 |
| | | வெள்ளி | 30.09.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.09.2016 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2016 |
| | | வெள்ளி | 14.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2016 |
| | | வெள்ளி | 21.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2016 |
| | | வெள்ளி | 28.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2016 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2016 |
| | | வெள்ளி | 11.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2016 |
| | | வெள்ளி | 18.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2016 |
| | | வெள்ளி | 25.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2016 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யுன் மாதம் 21 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.